தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 155/மா/2025**

**நாள்: 16.05.2025**

| | | |
|---|---|---|
| திரு. B. பாலாஜி<br>கோடம்பாக்கம்<br>சென்னை–24 | ---- | மனுதாரர் |
| மண்டல அலுவலர்<br>மண்டலம் 10<br>பெருநகர சென்னை மாநகராட்சி | ---- | எதிர்மனுதாரர் |

சென்னை கோடம்பாக்கம், ஸ்ரீமான்சன் பிளாட்ஸ் 9/12, ரத்தினம்மாள் தெரு, GF 9/12 என்கிற முகவரியில் வசிக்கும் மற்றும் சென்னை கோடம்பாக்கம் ஆற்காடு சாலை, கதவு எண்.339/98, 340/96 என்கிற முகவரியில் உள்ள ஸ்ரீஅம்பா டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.B. பாலாஜி என்பவரின் 24.03.2025 நாளிட்ட மனு இம்முறைமன்றத்தில் 25.03.2025 அன்று பெறப்பட்டு 155/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை கோடம்பாக்கம், ஸ்ரீமான்சன் பிளாட்ஸ் 9/12, ரத்தினம்மாள் தெரு, கதவு எண்.GF 9/12 என்கிற முகவரியில் வசிக்கும் மற்றும் சென்னை, கோடம்பாக்கம் ஆற்காடு சாலை கதவு எண்.339/98, 340/96 என்கிற முகவரியில் உள்ள ஸ்ரீஅம்பா டிரேடர்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திரு.B.பாலாஜி என்பவர் தனது 24.03.2025 நாளிட்ட மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“மேற்கண்ட விலாசத்தில் சர்வே எண்.TS No.44 பிளாக் எண்.25 கொண்ட காலஞ்சென்ற V.S.ரங்கநாதன் என்பவரது சொத்தில் கதவு எண்.340/96, ஆற்காடு சாலை, கோடம்பாக்கத்தில் உள்ள வணிக வளாகத்தில் கடந்த 10 வருடங்களாக வாடகையில் கடை நடத்தியும், 40 வருடமாக கட்டிடத்தை பராமரித்தும் அவரிடம் வேலையும் செய்து வந்தேன். கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் அந்த சொத்தில் இரண்டு லட்சம் அட்வான்ஸ் கொடுத்து கடையை வாடகைக்கு பெற்று அதில் ஸ்ரீஅம்பா டிரேடர்ஸ் என்கிற துணி கடையை GST எடுத்து IT கட்டி MSME சான்றிதழ் மற்றும் சென்னை மாநகராட்சியில் தொழில் வணிக உரிமம் பெற்று வணிகம் செய்து வருகிறேன்.

நான் கட்டிட உரிமையாளர் V.S.ரங்கநாதனிடம் வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி கடை நடத்தி வந்த நிலையில் திடீரென அவர் 23.06.2018 அன்று இறந்து விட்ட காரணத்தாலும் அவருக்கு திருமணம் ஆகவில்லை என்பதாலும் அச்சொத்திற்கு வாரிசு என்று கூறிக்கொண்டு ரங்கநாதன் தங்கை மாலினி ரவிந்தீரன் என்பவர் சொத்திற்கு உரிமையாளர் நான் தான் எனக்கூறி என்னிடம் 6 வருடத்திற்கு மேலாக மாத மாதம் வாடகை தொகையை வாங்கி வருகிறார். மேலும், தற்போது வாடகை பணத்தை தவறாமல் அவரது சேமிப்பு வங்கி கணக்கில் இன்று வரை செலுத்தி வருகிறேன். கடந்த 19.01.2022 அன்று மீண்டும் ரூ.1,00,000/– அட்வான்ஸ் ஆக மாலினி ரவிந்தீரன் என்னிடம் வாங்கினார். தற்பொழுது மாலினி ரவிந்தீரன் அவர்கள் மாநகராட்சி மண்டலம் 10 அலுவலகத்தில் சென்று என் பெயரில் கடை நடத்த மாநகராட்சி தொழில் உரிமம் இல்லாமல் கடையில் வியாபாரம் செய்வதாக பொய்யான சங்கதியை கூறி 10.04.2024 அன்று உதவி வருவாய் அலுவலர் துரைராஜ் மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் பிரகாஷ் ஆகியோரிடம் பல பொய் புகார்களை தொடர்ந்து அளித்து வந்தார். அதை பெற்றுக்கொண்ட உதவி வருவாய் அலுவலர் துரைராஜ் மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் பிரகாஷ் ஆகியோர் மாலினி ரவிந்தீரன் அவர்களிடம் நீங்கள் பெயர் அளவில் நீதிமன்றத்தில் ரிட் மனு போடுங்கள் நான் நீதி மன்றத்தில் உங்களுக்கு சாதகமாக பதில் தருகிறேன் என்று கூறி சதி திட்டம் தீட்டி கொடுத்தார் மற்றும் பல வியாபாரிகளின் தொழில் உரிமத்தை ரத்து செய்து வாழ்வாதாரத்தை கெடுத்துள்ளனர்.

அவர்களின் ஆலோசனைபடி மாலினி ரவிந்தீரன் அவர்கள் நீதி மன்றத்திற்கு சென்று வேண்டுமென்றே AROவை பார்ட்டியாக சேர்த்து W.P.No.29675 / 2024–ன் கொண்ட ரிட் மனு தாக்கல் செய்தார். அதன் விசாரணையில் என்னிடம் GST மற்றும் MSME சான்றிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி தொழில் வரி எதுவும் இல்லை என்று சட்டத்திற்கு புறம்பாக உண்மையை மறைத்து ARO துரைராஜ், மாலினி ரவிந்தீரனுக்கு சாதகமாக பதிலை சொல்லி உரிமத்தை ரத்து செய்ய எங்களுக்கு அதிகாரம் உள்ளது என நீதி மன்றத்தில் ரிட் மனு விசாரணையில் வாய்மொழியாக தெரிவித்து அதன்படி நீதிமன்றத்தில் தன்னால் உரிமத்தை ரத்து செய்ய வழிவகை உள்ளது என்று பொய்யாக தீர்மான சென்னை மாநகராட்சியின் எண்.232/2024, நாள் 01.09.2024 பொருள் எண்.39 என உள்ள தனக்கு அதிகாரம் இல்லாத ஒருங்கிணைப்பு செய்யும் பதவியை மட்டும் உள்ள தீர்மான நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அதன் தொடர்ச்சியான ஆணையாளர் உத்தரவை தாக்கல் செய்யவில்லை. அதன் அடிப்படையில் தான் என்னுடைய கடையின் உரிமத்தை ரத்து செய்தார்கள்.

இந்நிலையில் மண்டல அலுவலர் முருகேசன், முதுநிலை வருவாய் அலுவலர் பிரகாஷ், உதவி வருவாய் அலுவலர் துரைராஜ், உதவி பொறியாளர் நளினி, உதவியாளர் கவி மற்றும் உதவி வருவாய் அலுவலர் மாதவன் ஆகிபோர் என்னை மிரட்டி கட்டிட உரிமையாளரிடம் கடை அக்ரிமெண்ட் போட்டு கொண்டு வா அதுவரை நான் 31.03.2028 வருடம் வரை உள்ள உனது ஸ்ரீஅம்பா டிரேடர்ஸ் சென்னை மாநகராட்சி வணிக உரிமத்தை 06.02.2025ம் தேதியில் முடக்கி விட்டேன் என்று வ.து.ந.க.எண்.ஆர்3/14606/2023 தேதியில் கடிதத்தை 06.02.2025 ம.அ.10ன் கடிதத்தை எனக்கு வழங்கி அதை நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார்.

மேலும், மண்டல அலுவலர் முருகேசன், முதுநிலை வருவாய் அலுவலர் பிரகாஷ், உதவி வருவாய் அலுவலர் துரைராஜ், உதவி பொறியாளர் நளினி, உதவியாளர் கவி மற்றும் உதவி வருவாய் அலுவலர் மாதவன் ஆகியோர் இதே போல் மாலினி ரவிந்தீரனுடன் கூட்டு சேர்ந்து கதவு எண்.339/98 என்கிற கதவு எண்ணில் சர்வே எண்.TS No.71 பிளாக் எண்.24 இருந்த 24 கடைகளை சீல் வைத்து நீதி மன்றத்தில் பொய்யான தகவலை தெரிவித்து கடந்த 23.1.2025–ல் அதை உடைத்து இதே பாணியில் மாலினி ரவிந்தீரனுக்கு சாதகமாக சிவில் வழக்குகள் மூலம்

சட்டபடி தீர்வு காணாமல் கடையின் தொழில் உரிமத்தை ரத்து செய்து தொழில் செய்யவிடாமல் தடுத்து அதே தெருவில் உள்ள கதவு எண்.339/98ல் உள்ள கடையை பூட்டி சீல் வைத்து கைப்பற்றி கட்டிட உரிமையாளர் மாலினி ரவிந்தீரனிடம் கடையை காலி செய்து ஒப்படைக்க வேண்டும் என்று 14.06.2024 அன்று கடிதத்தை வழங்கி சீலை அகற்றி 23.01.2025ல் கடையை உடைத்து கட்டிட உரிமையாளர் எனக் கூறிக் கொள்ளும் மாலினி ரவிந்தீரனிடம் ஒப்படைத்துள்ளனர்.

கட்டிட உரிமையாளருக்கும் கடை வாடகைதாரர்களுக்கும் பிரச்சனை என்றால் அதை சிவில் உரிமையியல் நீதி மன்றம் மற்றும் RLTOP வழக்கு போட்டு தீர்வு காணவேண்டும். ஆனால் அதற்கு குறுக்கு வழியாக மண்டல அலுவலர் முருகேசன், முதுநிலை வருவாய் அலுவலர் பிரகாஷ் , உதவி வருவாய் அலுவலர் துரைராஜ், உதவி பொறியாளர் நளினி, உதவியாளர் கவி மற்றும் உதவி வருவாய் அலுவலர் மாதவன் ஆகியோர் கட்டிட உரிமையாளர்களிடம் கையூட்டு பெற்றுக்கொண்டு சட்ட விரோதமாக நம்பிக்கை ஏற்படுத்தி வணிக உரிமத்தை ரத்து என்கிற குறுக்கு வழியை கடைபிடித்து கட்டிட உரிமையாளர்களுடன் கூட்டு சதி செய்து இது போல் நீதிமன்ற அதிகார வரம்புக்குள் நுழைந்து குறுக்கு வழியில் 8–க்கும் மேற்பட்ட ரிட் மனுக்கள் தாக்கல் செய்து கடைகளுக்கு சீல் வைத்து கட்டிடத்தை உடைத்து காலிமனையாக மாற்றி மாலினி ரவீந்திரனிடம் ஒப்படைத்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல் மக்கள் வரி பணத்தில் சம்பளம் வாங்கும் சென்னை பெருநகர மாநகராட்சி ஊழியர்கள் பத்துக்கும் மேற்பட்ட நபர்களை அழைத்து வந்து உதவி வருவாய் அலுவலர் துரைராஜ் மற்றும் முதுநிலை வருவாய் அலுவலர் பிரகாஷ் ஆகியோர் குண்டர்கள், ரவுடிகள் போல பயன்படுத்தி காவல் துறை துணையுடன் கடைகளை காலி செய்துள்ளனர். அதற்கான புகைப்பட ஆதாரம் இத்துடன் இணைத்துள்ளேன்.

கடந்த 13.08.2024ல் முதுநிலை வருவாய் அலுவலர் பிரகாஷ், உத்தரவின் பேரில் நான்கு மாநகராட்சி ஊழியர்கள் சுமார் 3 மணியளவில் கதவு எண்.340/98, ஆற்காடு சாலை, கோடம்பாக்கம் கட்டிடத்திற்குள் நுழைந்து அதிலுள்ள எனது கடையின் வணிகத்திற்கு தேவையான பெரிய அளவிலுள்ள ரூபாய் மூன்று இலட்சம் மதிப்புள்ள பெயர் பலகையை சட்ட விரோதமாக உடைத்து அப்புறப்படுத்திவிட்டனர். இது சம்பந்தமாக புகைப்பட ஆதாரம் இணைத்துள்ளேன்.

கடந்த 24.03.2024 காலை 6 மணிக்கு என்னுடைய கதவு எண்.339/98 TS.No.71 பிளாக் எண்.24 கொண்ட கடையை உடைத்து ரூ.6,00,000/– மதிப்புள்ள பொருட்களை திருடிச் சென்றனர். பின்னர் கடந்த 23.01.2025 தேதியில் என்னுடைய வாடகை கடையை முழுவதுமாக இடித்து ரூ.15,00,000/– மதிப்புள்ள மரச்சாமான்கள் மற்றும் மின்னனு பொருட்கள் கண்ணாடிகளை எடுத்து சென்றனர் அதற்கான ஆதாரம் புகைப்படத்தை இத்துடன் இணைத்துள்ளேன்.

கடந்த 16.09.2024 அன்று என்னுடைய கதவு எண்.339/98 (சர்வே எண்.TS No.44 / பிளாக் எண்.25) கொண்ட இடத்தில் உள்ள கடையின் தொழில் உரிமத்தை ஆள்மாறாட்டம் செய்து கடிதத்தை கொடுத்து இப்பொழுது நடக்கும் அனைத்து சட்ட விரோதத்திற்கும் மூலக்காரணமாக இருந்தது.

எனவே இதுபோல் குறுக்கு வழியை பயன்படுத்தி எனது கடை மீது பொதுமக்கள் யாரும் புகார் கொடுக்காமல் எந்தவித சட்ட விரோதமான தொழில் செய்யாத நிலையில் புகார் ஏதும் அளிக்காத நிலையிலும், அவ்வாறு ஒரு புகார் பெறப்பட்டாலும் அதை விசாரித்து ஆதாரத்துடன் நிருபனம் செய்திருந்தால் மட்டுமே அதுவும் சென்னை மாநகராட்சி முதன்மை ஆணையரால்

மட்டுமே TNULB2023 விதி 302–ன்படி நிரூபிக்கப்பட்ட அடிப்படையில் வணிக உரிமத்தை ரத்து செய்ய இயலும் அப்படி இருக்கும் நிலையில் எனது கடையை காலி செய்ய குறுக்கு வழியை கையாண்டு சட்டப்படி GST மற்றும் IT கட்டி MSME உரிமம் பெற்று பெரும் முதலீடு செய்து கஷ்டப்பட்டு 11 வருடங்களாக செலவு செய்து வியாபாரத்தை பெருக்கி தொழில் செய்து வந்த என்னை சிவில் உரிமைக்காகவும் கடை வாடகை சம்மந்தமாக சிவில் வழக்கு **O.S.6952 of 2023** நடந்து வரும் நிலையில் 06.02.2025 அன்று எனது தொழில் உரிமத்தை முடக்கப்பட்டுள்ளதாக எனக்கு அறிவித்த பிறகு 08.02.2025 மற்றும் 09.02.2025 அன்று நான் தங்களுக்கும் இயக்குநர் நகராட்சி நிர்வாகம் அவர்களுக்கும் மேல் முறையீடும் செய்துள்ளேன். ஆதாரம் இணைத்துள்ளேன். ARO திரு.மாதவன் 14.6.2024–ல் நீதி மன்றத்தில் என் மீது FIR பதியபட்டுள்ளதாக தவறான தகவலை தந்து தான் என் கடையை உடைக்க காரணம். இவர் கொடுத்த பொய் Report வைத்து தான் 30.06.2024ல் என் மீது FIR பதிய காரணமானது.

எனவே வேண்டுமென்றே சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ல் பணியாற்றி வரும் மண்டல அலுவலர் முருகேசன், முதுநிலை வருவாய் அலுவலர் பிரகாஷ், உதவி வருவாய் அலுவலர் துரைராஜ், உதவி பொறியாளர் நளினி, உதவியாளர் கவி மற்றும் உதவி வருவாய் அலுவலர் மாதவன் மற்றும் அடையாளம் தெரிந்த பெயர் தெரியாத 10–க்கும் மேற்பட்ட சென்னை பெருநகர மாநகராட்சி ஊழியர்கள் ஆகியோர் மீது தமிழ்நாடு நகர உள்ளாட்சிகள் சட்டம் 1998 விதிகள் 2023–ன்படி மற்றும் சென்னை பெருநகர மாநகராட்சி பணியாளர்கள் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுத்து இந்த நிகழ்வில் இவர்கள் கையூட்டு பெற்று சேர்த்துள்ள பணத்தை இலஞ்ச ஒழிப்புத்துறை மூலம் குற்ற வழக்கு பதிவு செய்து தொடர் நடவடிக்கையாக மேற்குறிய குற்றவாளிகளின் சொத்துக்களை அரசு உடைமையாக்க வேண்டும். கட்டிட உரிமையாளர்களுக்கு சாதகமாக குறுக்கு வழியை கையாண்டு கடைகளுக்கு தொழில் செய்ய வழங்கப்பட்ட தொழில் உரிமம் ரத்து பார்முலா மூலம் தமிழ்நாட்டில் பொருளாதார கலவரத்தை ஏற்படுத்தி வரும் இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பணி நீக்கம் செய்து கட்டிட உரிமையாளர் மாலினி ரவிந்தீரனுடன் கூட்டு சேர்ந்து சதி செய்து எனது கடையையும், வியாபாரத்தையும் அபகரிக்க திட்டமிட்டு எனது வணிக உரிமத்தை முடக்கம் செய்ததாக எனக்கு கடிதம் அனுப்பிய நபர்களான மண்டல அலுவலர் முருகேசன், முதுநிலை வருவாய் அலுவலர் பிராகாஷ், உதவி வருவாய் அலுவலர் துரைராஜ், உதவி பொறியாளர் நளினி, உதவியாளர் கவி மற்றும் உதவி வருவாய் அலுவலர் மாதவன் மற்றும் பெயர் தெரியாத அடையாளம் தெரிந்த மாநகராட்சி ஊழியர்கள் 10 பேர் மீது நடவடிக்கை எடுத்து என்னுடைய வியாபாரத்தை நஷ்டம் ஏற்படுத்திய மற்றும் எனக்கு சேர வேண்டிய நிவாரண தொகையை தமிழக முதல்வரின் நிவாரண நிதிக்கு செலுத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய தொழிலை இடையூறு இல்லாமல் நான் சுமூகமாக நடத்த சென்னை பெருநகர மாநகராட்சி ஊழியர்களால் எனது தொழிலுக்கு எந்த குந்தகமும் ஏற்படாமல் இருக்க உத்திரவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

2. மனுதாரரின் மனு மற்றும் மனுதாரர் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் சென்னை–24, கோடம்பாக்கம், ஆற்காடு சாலை, கதவு எண்.340/96–ல் காலஞ்சென்ற திரு.V.S.ரங்கநாதன் என்பவரது வணிக வளாக கட்டிடத்தில் 10 வருடங்களாக வாடகை கொடுத்தும், 40 வருடமாக கட்டிடத்தை பராமரித்தும் அவரிடம் வேலை செய்து வந்தார் என்பதும் கடந்த 2014 ஆண்டு முதல் அந்த சொத்தில் ரூபாய் இரண்டு இலட்சம் அட்வான்ஸ் கொடுத்து கடையை வாடகைக்கு எடுத்து ஸ்ரீஅம்பா டிரேடர்ஸ் என்கிற துணி கடையை நடத்தி

வந்ததும் திரு.V.S.ரங்கநாதன் 23.06.2018 அன்று இறந்து விட்ட காரணத்தினால் அவருடைய வாரிசு என்று கூறிக்கொண்ட ரங்கநாதன் தங்கை மாலினி ரவீந்திரன் தன்னிடம் மாத வாடகை வாங்கி வந்தார் என்பதும், ஆனால், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலகத்தில் தான் தொழில் உரிமம் இல்லாமல் கடை நடத்தி வருவதாக தெரிவித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலர்களுடன் சேர்ந்து, தன்னுடைய தொழில் உரிமத்தை பொய்யான தகவலின் அடிப்படையில், ரத்து செய்தும், தனக்கு பெரு நஷ்டத்தை ஏற்படுத்திவிட்டதாகவும், மேலும், இது குறித்து சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் சிவில் வழக்கு எண்.O.S.No.6952/2023 தொடரப்பட்டு நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்து, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 10–ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ள பொருட்பாடு தொடர்பாக சென்னை உரிமையியல் நீதி மன்றத்தில் <u>சிவில் வழக்கு எண்..**O.S.No.6952/2023** மனுதாரரால் தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது</u> என்பது அறிய முடிகிறது.

4. இம்மாதிரி வழக்குகள் நிலுவையில் இருக்கும் பொருட்பாடு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014 விதி 10(3) b–ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"<u>10 (3)</u> : The Ombudsman shall not enquire in to matter relating to:-

a) xxx
b) any matter in respect of which an enquiry has been ordered under the commission of Inquiries Act; 1952 or any matter pending before a Court.
c) xxx

5. எனவே, மனுதாரரின் புகார் தொடர்பாக மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால், மேலே பத்தி 4–ல் குறிப்பிட்டுள்ள விதியின்படி, மனுதாரரின் மனு மீது இம்முறை மன்றத்தால் <u>மேல் நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை</u> என்று முடிவு செய்து, அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு மே திங்கள் 16ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்,

1) திரு.B.பாலாஜி,
ஸ்ரீமான்சன் தெரு,
G-F/9/12 ரத்தினம்மாள் தெரு,
கோடம்பாக்கம்,
சென்னை–600 024.

2) மண்டல அலுவலர்
மண்டலம் - 10,
பெருநகர சென்னை மாநகராட்சி,
11/25, டாக்டர் அம்பேத்கர் ரோடு,
கார்ப்பரேசன் காலனி,
கோடம்பாக்கம்,
சென்னை– 600 024

நகல்:

1) ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

2) மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

21/5/25

செயலாளர்.

21/5/25